Notification of vacancies

* 197. *Q.*—Dr. H. V. HANDE :

Thiru D. S. A. SIVAPRAKASAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government has directed the Director of Employment and Training to request the employers to notify vacancies well in advance and to allow the candidates sufficient time both for interview and appointment; and

(*b*) if so, the details thereof?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : (அ) ஆம்.

(இ) இது குறித்து 5—8—1971-ம் நாளிட்ட தொழிலாளர் நலத்துறையின் குறிப்பாணை எண் 30524/எப்-2/71-2ன்படி @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Sir, may I know whether the Government are aware of the number of irregularities committed by the management in the matter of notifying the number of vacancies. Also, may I know the method by which the Employment Exchange notifies vacancies to the persons who have registered their names. For instance, when a particular person has been notified about a particular job which will last for only 15 days, he will have to register his name again. So, whether it is possible to streamline the method of sending notifications to the persons who have registered their names in the Employment Exchange.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : இந்தக் கேள்வி தனியார் துறை நிறுவனங்கள் வேலைக்காக நம்முடைய எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் இருந்து பெயர்களைக் கேட்கும்போது, காலதாமதமாகக் கேட்கிறார்கள், அல்லது குறுகிய கால இடைவெளியில் கேட்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒரு டைரக்ஷன் கொடுத்து கொஞ்சம் முன் கூட்டியே கேட்பார்களானால் அவர்கள் பெயர்களை அனுப்பி வைக்கவும், பதிவு செய்துகொண்டவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பும் ஏற்படும் என்பதுதான் இதிலுள்ள பிரச்சினை. மற்ற விவரங்கள் இப்போது இல்லை.

@ 415–417-ம் பக்கங்களில் இணைப்பு–2 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.